விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 107 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 22 சனிக்கிழமை (05.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நிராகரிக்கப்பட்ட 37 மனுக்களை ஏற்றுக்கொள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட 37 ரிட் மனுக்களை ஏற்றுக்கொண்டு, அவற்றைத் தேர்தல் நடவடிக்கையில் சேர்க்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முற்பகல் உத்தரவிட, அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர், அதேபோன்று 59 மனுக்களை உயர்நீதிமன்றம் அடியோடு நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கான பிறப்புச் சான்றிதழைப் பொறுத்தவரை சான்றிதழ் பத்திரத்தின் நிழல் படப் பிரதியில் சமாதான நீதவான் சான்றுரைத்திருந்தால் அத்தகைய ஆவணத்தை நிராகரிக்காமல் ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டவையாகக் கூறப்பட்ட 37 வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு நேற்று முற்பகல் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் எம்.ரி.முஹம்மட் லபார், நீதியரசர் கே.பிரியங்க பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை வழங் 15

## தமிழர்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ
# பொது வாக்கெடுப்பு மட்டுமே ஒரே தீர்வு
## பிரதமர் மோடியிடம் விஜய் வலியுறுத்து

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ பொதுவாக்கெடுப்பு மட்டுமே ஒரே தீர்வு. பிரதமர் மோடி பொதுவாக்கெடுப்பு நடத்த இலங்கைக்கு நேரடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத் தலைவரும் நடிகருமான விஜய் வலியுறுத்தியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



### புத்தாண்டை முன்னிட்டு
## 13, 14ஆம் திகதிகளில் மதுச்சாலைகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இரு நாட்கள் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் உள்ள 15

### மோடியின் வருகையை முன்னிட்டு
## 11 இந்திய மீனவர்கள் அவசரமாக விடுவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவதை முன்னிட்டு சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 15


## மே - 6 திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும்
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

மே மாதம் 6ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக் 15

## இலங்கை வந்தடைந்தார் பாரதப் பிரதமர் மோடி



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அழைப்பினை ஏற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.33 மணியளவில் நாட்டை வந்தடைந் 15

### கிளிநொச்சி முகமாலையில்
## 40 வயது குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலையில் தனிமையில் வசித்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த குணபாலசிங்கம் பெஞ்சமின் போல் (வயது-40) என்ற ஆட்டோச் சாரதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-4)

## யாழ்ப்பாணத்தில் ஹெரோயினுடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் ஹெரோயினுடன் மூன்று இளைஞர்கள் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 கிராம் 780 மில்லிகிராம் ஹெரோயின் அவர்களிடமிருந்து மீட் 15

## 16 ஆயிரம் பேருக்கு வடக்கில் தொழில்வாய்ப்பு
### இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் வடக்கில் முன்மொழிந்துள்ள 3 முதலீட்டு வலயங்களும் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் இதனூடாக 16 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(3856)


தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

# மரண அறிவித்தல்

## கணபதி இராசையா

(தேவி ரவல்ஸ் உரிமையாளர், முன்னாள் ஊரெழு கிழக்கு ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் தலைவர்)



மலர்வு 18.11.1955 உதிர்வு 04.04.2025

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி இராசையா அவர்கள் நேற்று (04.04.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் பசுபதி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜாதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும் கௌசினி (மருந்தாளர் - பிரதேச வைத்தியசாலை, கோப்பாய்), சாளினி (லண்டன்), அஸ்வினி (முகாமைத்துவ உதவியாளர் - விவசாய காப்புறுதி நிறுவனம்), தமிழினி (ஆசிரியர் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ரூபிகா (ஆசிரியர் - கிட்ஸ்பார்க், உரும்பிராய்), லெளஜன் (கெவில்ரன், கைதடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துளசிதரன் (தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை), திருலோகராஜன் (லண்டன்), சுகந்தன் (ஆசிரியர் - மன்னார் தேவன்பிட்டி வித்தியாலயம்), அன்றூஅனோஜ் (கிராம உத்தியோகத்தர்), மிரேஸ் (கனடா) ஆகியோரின் ஆசை மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசா, முத்துராசா மற்றும் துரைராசா, தவமணி காலஞ்சென்ற தங்கராசா மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசேந்திரம் (தலைவர் - நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), சிவமணி, மகேந்திரம், தெய்வேந்திரம் மற்றும் காலஞ்சென்றவர்களான புவனேந்திரம், சந்திரன் மற்றும் குணேந்திரம் (சுவிஸ்), சந்திராதேவி, செல்வம் மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சந்திரமதி, இரத்தினம், தங்கவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாநிதி காலஞ்சென்ற தருமதுரை மற்றும் சிவனேஸ்வரி, யோகமலர், கனகேஸ்வரி (ஜேர்மனி), மலர்ராணி, வனிதா (சுவிஸ்), சிவராசா ஆகியோரின் அன்புச் சகலனும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளான நிஸ்நிதா, தஸ்விதா லண்டனைச் சேர்ந்த திருமாறன், கர்ணிகா மற்றும் பிருத்விக், ஆருக்சன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

(3855)

தகவல் : குடும்பத்தினர்
077 977 3571

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் திருமதி லோகேஸ்வரி செல்லத்தம்பி

*திதி : வளர்பிறை அட்டமி*

ஆண்டொன்று ஆனதோ
அதி விரைவாய்
உங்கள் மறைவை இன்னும் எங்கள் மனம் ஏற்கவில்லை அம்மா!
கனவுகள் கலைந்து போனது
நம் கற்பனைகள் எல்லாம் சிதைந்து போனது
வாழ்வின் அர்த்தம் புரிந்தது
அம்மா என்பது ஒரு மந்திரம்
அது சொல்ல சொல்ல இனிக்கும் தேனாய், - என் செய்வோம்
கொடுத்து வைத்தது அவ்வளவு தான் நாங்கள்
என்று எம்மை நாமே தேற்றிடுவோம் !
எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாய் இருந்தீர்கள்
இன்று ஆறுதல் இன்றி நாம் எல்லாரும்
உங்கள் நினைவுகளால் தவிக்கின்றோம்!
மீண்டும் வரமாட்டீர்களா என மனம் எண்ணுகிறது
பிறப்பு ஒன்று இருந்தால்
இறப்பு என்பது நிச்சயம்
விதி வலியது
விளையாடுகிறது அழியாத காவியமாய்
நீங்கள் அனைவரின் மனத்திலும் என்றென்றும்
இடம் பிடித்துள்ளீர்கள் எங்கள் செல்ல அம்மா
உங்கள் ஆத்மா இறைவன் திருப்பாதத்தில் இளைப்பாறட்டும்
என்றென்றும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய்.

(998)

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மற்றும் பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் புதிய வரியால் உலக பொருளாதாரம் ஆபத்தில்!

## சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை



(ஜெனீவா)

**உலக பொருளாதாரத்திற்கு மேலும் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை தவிர்ப்பது அவசியம் என சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்**

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,


சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் காணப்படுகின்ற சூழலில் அமெரிக்காவின் புதிய வரிகள் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி குறித்த கண்ணோட்டத்திற்கு குறிப்பிடத்தக்க ஆபத்தைக் குறிக்கின்றன.

உலக பொருளாதாரத்திற்கு மேலும் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை தவிர்ப்பது அவசியம்.

அமெரிக்காவும் அதன் சகாக்களும் வர்த்தக பதற்றத்திற்கு ஆக்கபூர்வமான விதத்தில் தீர்வைக் காண வேண்டும், பதற்றத்தை குறைக்க வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த மாத இறுதியில் இடம்பெறும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களின் போது வெளியிடப்படும் உலகின் பொருளாதார நிலை குறித்த அறிக்கைகளில் சர்வதேச நாணயநிதியம் தனது மதிப்பீட்டினை முன்வைக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# ஐ.ம.ச தலைவராக மீண்டும் சஜித்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாச மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே இத்தெரிவு இடம்பெற்றுள்ளது. (நி-8)

# புதிய தீர்வை வரி குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை

## அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள புதிய பரஸ்பர வரிவிதிப்பு தொடர்பாக கலந்துரையாடல்களின் ஊடாக நிவாரணம் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அமெரிக்கா வர்த்தக பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. பூகம்பத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மியன்மாருக்கும் தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

ஏப்ரல் 9 ஆம் திகதிக்குப் பின்னர் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. இதற்கு முன்னர் பேச்சுவார்த்தையின் ஊடாகத் தீர்வை வரி வீதத்தை குறைத்துக் கொள்வது தொடர்பில் கோரிக்கை முன்வைக்க முயற்சித்துள்ளோம்.

அமெரிக்கா தனது தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்தாவிடின் மாற்று வழிமுறைகள் பல உள்ளன.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையின் ஊடாக விசேட சலுகைகள் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம். எமது தீர்வை வரிக் கொள்கையை இலகுபடுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம் எனத் தெரிவித்தார். (நி-8)

**மூன்று மாதங்களில் மட்டும்**

# வீதி விபத்துக்களால் 592 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் 590 இற்கும் மேற்பட்டோர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே போக்குவரத்துப் பிரிவின் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை 565 மரண விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும், இதன் விளைவாக 592 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டு காலத்தில், வீதி விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் வீதி விபத்துகளில் சராசரியாக தினமும் 7 முதல் 8 பேர் வரை இறக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)

# மானிய விலையில் உணவுப்பொதி இடைநிறுத்துமாறு உத்தரவு

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்காக மானிய விலையில் உணவுப் பொதியை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

இதன்படி, உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் தற்போதைய உணவுப் பொதியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் வர்த்தக, வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவின்படி, நன்மைகள் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள 12,753 புதிய விண்ணப்பதாரர்களில் தகுதியான பயனாளிகளுக்கு இந்த உணவுப் பொதி வழங்கப்படவிருந்தது.

அதன்படி,5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதிக்கான மானிய விலையில் 2,500 ரூபாவுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை லங்கா சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்க திட்டமிடப்பட்ட இந்த பருவகால உணவுப் பொதிக்கான அனுமதியை அமைச்சரவை அண்மையில் பெற்றிருந்தது. இந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேற்கண்ட அறிவிப்பு வந்துள்ளது. (நி-8)

# 100 மில்லியன் பெறுமதியான கைபேசிகளுடன் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான மொபைல் போன்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 528 மொபைல் போன்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் நேற்று அதிகாலை டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்தபோது விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர்.

கைதானவர் மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபர் ஆவார்.

அவர் பல மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஹோட்டல்களில் பணிபுரிந்து வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் சுங்க அதிகாரிகள் அவரை இலங்கைக்குள் அடிக்கடி பொருட்களை கடத்தும் நபராக அடையாளம் கண்டுள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி ஓவரில் வீழ்ந்தது மும்பை லக்னோ அணி கலக்கல் வெற்றி



## வீணானது சூரியகுமாரின் போராட்டம்

இறுதி ஓவரில் மும்பை அணி ஏமாற்ற, ல்க்னோ அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் லக்னோ, மும்பை அணிகள் மோதின.

**ரோகித் காயம்:**

வலைப்பயிற்சியின் போது முழங்காலில் காயமடைந்த மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா, இப்போட்டியில் பங்கேற்கவில்லை. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார்.

லக்னோ அணிக்கு மிட்செல் மார்ஷ், மார்க்ரம் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அஷ்வனி குமார் பந்தில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த மார்ஷ், 27 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களைச் சேர்த்த போது விக்னேஷ் "சுழலில்" மார்ஷ் (60) சிக்கினார். பாண்ட்யா "வேகத்தில்" நிக்கோலஸ் பூரன் (12), அணித் தலைவர் ரிஷப் பன்ட் (2) வெளியேறினர்.

**மார்க்ரம் நம்பிக்கை**

சான்ட்னர் வீசிய 14ஆவது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விரட்டிய ஆயுஷ் படோனி (30) ஓரளவு கைகொடுத்தார். 34 பந்துகளில் அரைச்சதம் எட்டிய மார்க்ரம் (54) நம்பிக்கை தந்தார். டேவிட் மில்லர் (27) ஆறுதல் தந்தார். ஆகாஷ்தீப் சிங்கை (0) வெளியேற்றிய பாண்ட்யா, பிரிமியர் லீக் அரங்கில் முதன் முறையாக 5 விக்கெட் சாய்த்தார்.

லக்னோ அணி 20 ஓவர்களில், 8 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை எடுத்தது. ஷர்துல் தாகூர் (5), அவேஷ் கான் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சுப்பர் சூர்யா**

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு வில் ஜாக்ஸ் (5), ரிக்கிள்டன் (10) ஏமாற்றினர். அடுத்து வந்த நமன் திர், ஆகாஷ்தீப் வீசிய 4வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி விளாசினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 69 ஓட்டங்கள் சேர்த்த போது திக்வேஷ் "சுழலில்" நமன் திர் (46) சிக்கினார். அவேஷ் கான் வீசிய 11வது ஓவரில் 2 பவுண்டரி அடித்த சூர்யகுமார், பிஷ்னோய் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி அரைச்சதம் எட்டினார். அவேஷ் கான் "வேகத்தில்" சூர்யகுமார் (67) ஆட்டமிழந்தார். திலக் வர்மா (25) "ரிட்டயர்ட் அவுட்" ஆனார்.

கடைசி ஓவரில் மும்பையின் வெற்றிக்கு 22 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அவேஷ் கான் பந்துவீசினார். முதல் பந்தை அணித் தலைவர் பாண்ட்யா சிக்சருக்கு அனுப்பி னார். அடுத்த 5 பந்துகளில், 3 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. மும்பை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்கள் எடுத்து 12 ஓட்டங்க ளால் வீழ்ந்தது.

பாண்ட்யா (28), சான்ட்னர் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ம-4)



# ஐ.பி.எல் தொடரில் அசத்தும் தமிழன்

## சாய் சுதர்ஷனுக்கு குவியும் பாராட்டுக்கள்



தமிழகத்தைச் சேர்ந்த சாய் சுதர்ஷன் ஐ.பி.எல் தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

சின்னசாமி திடலில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற போட்டியில் 49 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

தொடர்ச்சியாக 4ஆவது அரைச்சதம் அடிப்பாரென எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஹேசில்வுட் பந்தில் கீப்பருக்கு மேலாக ரேம்ப் ஷாட்டில் ஆட்டமிழந்தார்.

அனைத்து போட்டிகளிலும் சிறப்பாக விளையாடும் இவருக்கு இந்தியா முழுவதும் கிரிக்கெட் ரசிகர்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்த ஐ.பி.எல் சீசனில் மட்டும் 186 ரன்களை குவித்து அதிக ரன்கள் பட்டியலில் 2 ஆம் இடம் பிடித்துள்ளார்.

189 ரன்களுடன் நிக்கோலஸ் பூரன் முதலிடத்தில் இருக்கிறார்.

ஒட்டுமொத்தமாக 28 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி ஆயிரத்து 220 ரன்களை எடுத்துள்ளார். 8 அரை சதங் கள், ஒரு சதத்துடன் சராசரி 48.8 ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் வட இந்திய ஊடகங்களிலும் சாய் சுதர்ஷனை "மிஸ்டர் கன்சிஸ்டன்ட்" எனப் புகழ்ந்து வருகிறார்கள்.

தொடக்க கால ஐ.பி.எல் போட்டிகளில் ஸ்டிரைக் ரேட் பிரச்சினை இருந்தது. தற்போது, அதிரடியாகவும் விளையாடுவதால் சாய் சுதர்ஷன் அனைவரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார். (நி-8)

# நீயும் நானும் ஓர் தாய் பிள்ளை

## கோலிக்கு பந்து வீசும் போது உணர்ச்சிவசப்பட்ட சிராஜ்

## வைரலாகும் வீடியோ



ஐ.பி.எல் தொடரின் கடந்த புதன் கிழமை ஆட்டத்தில் ஆர்.சி.பி- குஜராத் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் குஜராத் அணி வெற்றி பெற்றது. இந்த சீசனில் குஜராத் அணிக்காக முதல் முறையாக விளையாடிய சிராஜ் குஜராத் வெற்றி பெற முக்கிய பங்காற்றினார்.

நான்கு ஓவர்களில் வெறும் 19 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 3 முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் சிராஜ்"க்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

முன்னதாக ஆர்.சி.பி அணி பட்டிங் செய்த போது முதல் ஓவரை முகமது சிராஜ் வீசினார். முதல் பந்தை எதிர்கொண்ட சால்ட் ஒரு ரன் எடுத் தார். இதனையடுத்து விராட் கோலி ஸ்ட்ரைக்கு வந்தார். அவருக்கு எதி ராகப் பந்து வீச ஓடி வந்த சிராஜ், பாதி வழியில் பந்து வீச முடியாமல் திரும் பினார். அப்போது சிராஜ் கையை அசைத்து மன்னித்து விடுங்கள் என்பது போல சைகை காட்ட பதிலுக்கு விராட் பரவாயில்லை என்பது போல சைகை காட்டினார். இருவரது முகத்திலும் ஒரு விதமான அன்பு வெளிப்பட்டது.

இந்த உணர்ச்சிவசமான சம்பவத்தை ஆர்.சி.பி ரசிகர்கள் வீடியோவாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

நான் ஆர்.சி.பிக்கு எதிராக விளையாடும் போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டேன். ஏனென்றால் நான் ஆர்.சி.பிக்காக 7 ஆண்டுகள் விளையாடிருக்கின்றேன். இதன் காரணமாக இன்று ஆட்டத்தில் நான் கொஞ்சம் பதற்றமாகவும் உணர்ச்சி வசப்பட்டேன் எனப் போட்டிக்கு பிறகு சிராஜ் கூறியது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## பொது வாக்...

இது தொடர்பில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை செல்லும் பிரதமர் மோடி அவர்கள், போர்க் குற்றங்களுக்காகக் கண்டிப்பதோடு, நடுநிலையான பொது வாக்கெடுப்பு நடத்த இலங்கை அரசுக்கு நேரடியான அரசியல் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலால் தமிழகக் கடற்றொழிலாளர்கள் இதுவரை 800க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடைமைகளும் வாழ்வாதாரமும் பறிக்கப்பட்டு விட்டன.

பிரதமர் மோடி அவர்கள் கட்டாயமாக இலங்கை அரசிடம் இதை வலியுறுத்திப் பெற வேண்டும். இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் பாதுகாப்பும் அமைதியும் நிம்மதியும் நிரந்தரமானதாக இருக்கப் பொது வாக்கெடுப்பு மட்டுமே ஒரே தீர்வு.

பிரதமர், "கச்சதீவு இந்தியாவின் உரிமை நிலம்" என்ற பயணத் திட்டத்தை முதன்மையாக வடிவமைக்க வேண்டும்.

நமது கடற்றொழிலாளர்களின் துயர் நீங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற விதத்தில் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமரின் இந்த இலங்கைப் பயணம் தமிழக் கடற்றொழிலாளர் மற்றும் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாக மட்டுமே இருக்க வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 375,000 இற்கும் அதிகமான போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 55 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்களுடன் ஒரு சந்தேக நபரை மது வரி திணைக்களத்தின் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு பெருந்தோட்ட பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கப்பலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 375,000 இற்கும் அதிகமாக போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை டுபாயில் இருந்து இயக்கப்படும் போதைப்பொருள் வலையமைப்பின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று மதுவரி திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (நி-8)

# சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

(கொழும்பு)

7 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க லங்கா சதொச நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதன்படி, பெரிய வெங்காயம், ரின் மீன், சிவப்பு சீனி, பருப்பு, நாட்டு அரிசி, கோதுமை மா மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படும் என சதொச நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சதொச நிறுவனத்தின் தீர் மானத்திற்கு அமைய, பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமின் விலை 140 ரூபாவாகவும் ரின் மீன் 425 கிராமின் விலை 395 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது டன் சிவப்பு சீனி ஒரு கிலோ கிராமின் விலை 255 ரூபாவாகவும் சிவப்பு பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 265 ரூபாவாகவும் குறைக் கப்பட்டுள்ளது.

நாட்டு அரிசி 213 ரூபாவாகவும் கோதுமை மா 155 ரூபாவாகவும் அத்துடன், சிவப்பு பச்சை அரிசியின் விலை 217 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின்
118 ஆவது குருபூசைத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

## திறந்த கட்டுரைப் போட்டி-2025

**கட்டுரைப்போட்டிக்கான அறிவுறுத்தல்கள்**

- 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்குபற்ற முடியும்.
- கட்டுரைப் போட்டியானது 20.04.2025 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.வ.கூ சங்க மண்டபத்தில் நடைபெறும்.
- போட்டியன்று தரப்படும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 800- 1000 சொற்களுக்கு உட்பட்டதாக எழுதுவதுடன் தெளிவான கையெழுத்தாக இருத்தல் வேண்டும். (நேரம் 2 மணித்தியாலங்கள்)
- கட்டுரைப்போட்டியின் தலைப்பானது சதாவதானியின் வரலாறு, சமயம், இலக்கியம், விஞ்ஞானம், கலை பண்பாடு, சமகால பொருளாதார அரசியல் சமூக பிரச்சினைகள் போன்ற விடயப்பரப்புக்களுள் உள்ளடங்கியதாக இருக்கும்.
- வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு சதாவதானியின் 118 ஆவது ஆண்டு விழாவில் (10.05.2025) வைத்து சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
- போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 18.04.2025 ஆம் திகதிக்கு முன்னர் போட்டியாளர் பெயர், முகவரி, தொ.பே.இலக்கம், தே.அ.அ.இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு **"செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை"** எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**கட்டுரைப்போட்டிக்கான பரிசு விபரம்**


| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | : | ரூபாய் 20,000.00 |
| இரண்டாம் பரிசு | : | ரூபாய் 15, 000.00 |
| மூன்றாம் பரிசு | : | ரூபாய் 10,000.00 |
| ஆறுதல் பரிசு | : | ரூபாய் 5,000.00 |

(சி-268)

மேலதிக தொடர்புகளுக்கு: **077 630 2307, 077 628 8790**



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.03.2025 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமடைந்த எமது புதல்வன்

**அமரர். நகுலேஸ்வரன் ஜக்சன் (டியூன்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 06.04.2025 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 07.04.2025 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றையநாள் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

மத்தொனி,
கரவெட்டி.

(997)

தகவல்: குடும்பத்தினர்
(077 664 8723)


# இராசிபலன்

05.04.2025
பங்குனி 22, சனிக்கிழமை
அட்டமி பின்னிரவு 01.09 மணிவரை

திருவாதிரை முற்பகல் 10.51 மணிவரை
சுபநேரம் 3.09-4.39 மணிவரை
இராகுகாலம் 9.09-10.39 மணிவரை

மகாஷ்டமி
சந்திராஷ்டமம்- அனுஷம், கேட்டை

வள்ளவன்




செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பேரசன சுகமுண்டு.




தொழில் நலன் கருதிய திட்டங்கள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.




அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.




அந்நியதேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.




விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.




குடும்பத்தினர் நண்பர்களிடையே கோபமாய் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




உறவினர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.




வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள்.

அன்பெனும் விளக்கணைந்தால் பொறாமை எனும் இருள் சூழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தமிழ் கலை இலக்கிய மாநாடு

## பங்குபற்றுமாறு தில்லி கலை இலக்கியப் பேரவையின் பொதுச்செயலாளர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத்துணைத் தூதரகமும் தில்லி கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்தும் இரண்டாம் தமிழ் கலை இலக்கிய மாநாடு இம் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் இரவு 8 மணிவரை யாழ் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளது.

அனைவரையும் பங்கு பற்றுமாறு தில்லி கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான பா.குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீமான் சாய்முரளி தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் ஆசியுரையினை கம்பவாரிதி இ.ஜெயராஜ் வழங்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழறிஞரும் திரைப்பட இயக்குநருமான முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், முனைவர். இரா. மாது, கல்வி உளவியலாளர் முனைவர் சரண்யா ஜெயக்குமார், தில்லி கலை இலக்கியப் பேரவை கௌரவ தலைவர் ALoha Dr.K.குமரன், தில்லி தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் இரா.முகுந்தன், தில்லி கலை இலக்கியப் பேரவைத் தலைவர் சொல் வேந்தர் பாலமுருகன், ஜப்பான் டோக்கியோ தமிழ்ச் சங்க நிறுவனத் தலைவர் கணேசன் ஹரி நாராயணன், குஜராத் வடோதரா தமிழ் சங்கத் தலைவர் சி.பி கண்ணன், லண்டன் தமிழோசை தலைவர் ஞான முருகன், தில்லி தமிழ் வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் Dr. ராம்சங்கர், The RASA Entity Chairman: Dr.M.J.ராஜேஸ், தில்லி கலை இலக்கியப் பேரவைத் துணைத் தலைவர் திருமதி.புவனா வெங்கட், தாய்த்தொண்டு மைய நிறுவுநர், திருமந்திரப் பேராசிரியர் தாய்.ராசி. ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்களின் புஸ்பாஞ்சலியும் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் "காத்தவராயன்" சிந்து நடைக்கூத்து நாடகமும் இடம்பெறுவதுடன் முனைவர் இரா.மாது, தலைமையில் "இலக்கியங்கள் கடைப்பிடிக்கவே என்பது குற்றம்" எனும் தலைப்பில் திருமதி. புவனா வெங்கட், சொல்வேந்தர் பாலமுருகன், பங்கேற்கும் வழக்காடு மன்றமும் இடம்பெறும். அத்துடன் இன்றைய இலக்கியம் பெரிதும் பேசப்பட வேண்டியது பண்பாட்டையா? படும்பாட்டையா? எனும் தலைப்பில் தாய்.ராசி.ஜெகதீஸ்வரன் தலைமையில் சிறப்புப்பட்டிமண்டபம் நடைபெறும். இதில் ப.நநீஷ், மோ.ஹரிகரன், இ.கார்திகாயினி, றொ.மைக்கலின் ஜூலியற், க.ஜீவானந்தன், ஜீவா சஜீவன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். தொடர்ந்து வாய்ப்பாட்டு, பரத நாட்டியம், இசை நிகழ்ச்சி என்பனவும் இடம் பெறும். (நி-8)

## சிவதொண்டன் மலர் வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் 89 ஆவது மலர் (2025 மே-ஜூன் மாத இதழ்கள்) வெளிவந்துவிட்டது.

இவ் மலரில் சுவாமி நின் இருதயமே என் வீடு எனது சீவியம், குருபாதம் எண்ணில் குருவருள் பொங்கும், நற்சிந்தனை போன்ற பல ஆன்மீகக் கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டுள் என. (நி-8)

## யோகர் சுவாமிகளின் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசை தினம் நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் கோவில் வீதி ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் தெல் லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப செயலாளர் ச.சந்தோசன் வரவேற்புரையினையும் யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ.ஜெயந்திரன் சிறப்புரையினையும் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி செல்வி சோபிதா சசிதரன் திருமுறை பாராயணமும் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களையும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான செயலாளர் இ.இராதாகிருஷ்ணா நன்றியுரையையும் வழங்கவுள்ளனர். (நி-8)

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, பெண்களின் கர்ப்பப்பை தொடர்பான பிரச்சினை தீர, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச் சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற் பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங்கப் படும்.

பயிற்சிகளைத் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் சு.நித்தியஸ்ரீ அவர்கள் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 076 857 1395. (நி-8)

## பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய பொதுமுகாமையாளர்



(சாவகச்சேரி)

பனை அபிவிருத்திச்சபையின் புதிய பொது முகாமையாளராக திருமதி.உமாகாந்தன் சிவகாமி பெருந்தோட்ட மற்றும் சமுக கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளரினால் ஏப்ரல் 1 ஆம் திகதி அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றிய திருமதி.சிவகாமி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பனை அபிவிருத்திச்சபையின் பதில் பொது முகாமையாளராக தனது பதவிகளை பொறுப்பேற்றிருந்தார்.

பதவி பொறுப்பேற்பு நிகழ்வில் பனை அபிவிருத்திச்சபையின் பணியாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-30)


# கல்யாணமாலை


## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 11 இல் சூரி செவ்<br>கி.பா: 23<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்: AL, Company (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15289 | பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: DO<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14771 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்:BBM, Gold Loan Officer(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார்தொழில்<br>தொ.இ: B/15290 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14778 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 12 இல் சூரி செவ்<br>கி.பா =36 ½<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்:BSc, MSc, Engineer (London)<br>எதிர்பார்ப்பு: BSc degree holder, Engineer<br>தொ.இ: B/15294 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்:மகம் 7 இல் செவ்<br>கி.பா:17 1/4<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:BSMS, சித்தமருத்துவர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13588 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உதைபந்தாட்ட மைதானம் இலங்கையில்



(கொழும்பு)

நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச உதைபந்தாட்ட மைதானம் ஒன்றை இலங்கையில் அமைக்க உதவுவதாக ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் ஷேக் சல்மான் பின் இப்ராஹிம் அல் கலிபா உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அல் கலிபா, விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, ஆசிய நாடுகள் பல பொருளாதார ஊழல்களை எதிர்கொண்ட போதிலும் இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தின் ஊழலற்ற செயற்பாடுகள் சிறப்பாக இருப்பதாக அல் கலிபா தெரிவித்துள்ளார். இதன் பயனாக இலங்கையில் காற்பந்து மிக சிறந்த நிலையை எட்டும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், இலங்கையில் நவீன காற்பந்தாட்ட மைதானத்தின் எதிர்காலத் திட்டம் தொடர்பிலும் சுனில் குமார கமகேவுடன் அல் கலிபா கலந்துரையாடியுள்ளார். (நி-8)


## அகில இலங்கை சைவநெறி மற்றும் தமிழ்மொழியும் நுண்ணறிவும் தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள்-2024

அகில இலங்கை சைவநெறி (தரம் 04 முதல் 12 வரை) மற்றும் தமிழ்மொழியும் நுண்ணறிவும் (தரம் 04 முதல் 08 வரை) தேர்வுகளுக்குரிய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுகின்றது.

மதிப்பீட்டுப் பணியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள தகுதியானவர்கள் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். பணிகளுக்குரிய கௌரவ வேதனம் வழங்கப்படும்.

**தொ.பே. இல: 021 222 7678** **பரீட்சை செயலாளர்.**



## பொதுக்கூட்ட மீள் அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டுகளைச் சீரமைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டம் ஏற்கனவே திட்டமிட்டபடி 06.04.2025 நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

அனைத்து உபயகாரர்களையும் தொண்டர்சபை உறுப்பினர்களையும் கலந்துகொண்டு ஆலயத் தொண்டுகளை சீர் செய்ய உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி

**செயலாளர்,**
**தர்மகர்த்தாக்கள் சபை,**
**அளவெட்டி கும்பழாவளைப்**
**பிள்ளையார் கோயில்.** 05.04.2025

(3853)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 3, யாழ்ப்பாணம் வீதி, 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-12

வலிகாமம் மேற்கு பிரதேசசபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 12 யாழ்ப்பாண வீதி, 1ஆம் ஒழுங்கையில் உள்ள இல:3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சுப்பையா நாகரத்தினம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் 1/4 பங்கினை **சுப்பையா நாகரத்தினம் பெண் சின்னம்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு S.R.அரியநாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 262/13.09.1948ஆம் இலக்க உறுதியால் **எட்வின் இராஜநாயகம் விக்ரர் கைம்பெண் மேரி எட்வின் அன்னம்மா விக்ரர்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சுப்பையா நாகரத்தினம் பெண் சின்னம்மா** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் சொரியலாய் 1/10 பங்கினை பிரசித்த நொத்தாரிசு க.தி.குமாரசாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11467/25.06.1960ஆம் இலக்க உறுதியால் **சீதாலிதாசன் வேதநாயகமும் பெண் எபிவிறூபாவதி வேதநாயகமும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**அப்பாப்பிள்ளை தவராசன் பெண் புனிதவதி** ஆகியவர் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் நில பர.இலா 04 விஸ்தீரணமுடைய ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு க.சேனாதிராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3740/20.06.1962ஆம் இலக்க உறுதியால் **சுப்பையா நாகரத்தினமும் பெண் சின்னம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**டொக்டர் விக்ரர் ஜெயரத்தினம் முத்துக்குமாருவும், சுப்பையா நாகரத்தினமும் பெண் சின்னம்மாவும், அப்பாப்பிள்ளை தவராசன் பெண் புனிதவதியும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்ப பங்கிற்கு சொந்தகாரர்களாகவிருந்து குறித்த ஆதனங்களை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு வ.மயில்வாகனம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 388/24.08.1975 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து நிந்தமாக்கப்பட்ட தத்தமது ஆதனங்களுக்குச் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**நவரத்தினம் சத்தியமூர்த்தியும் பெண் பகவதியும்** ஆகியவர்கள் குறித்த நிந்தமாக்கப்பட்ட ஆதனத்தில் ஒரு பகுதியானது தங்களில் 2ஆம் பேரின் காலஞ்சென்ற பெரிய தந்தையார் டொக்டர விக்ரர் ஜெயரத்தினம் முத்துக்குமாரு பேரில் மேற்குறிப்பிட்ட 388ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதியின் பிரகாரம் டொக்டர் விக்ரர் ஜெயரத்தினம் முத்துக்குமாருவிற்கு சொந்தமும் ஆட்சியுமானதெனவும், குறித்த டொக்டர் விக்ரர் ஜெயரத்தினம் முத்துக்குமாரு திருமணம் செய்யாமலும், தத்துவம் எடுப்பதற்கு குறைவான மரணச்சொத்துக்களை விட்டிறக்க குறித்த ஆதனம், குறித்த டொக்டர் விக்ரர் ஜெயரத்தினம் முத்துக்குமாருவின் ஒரே சகோதரனான தங்களில் 2ஆம் பேரின் தந்தையை வந்தடைந்தது எனவும், அவர் குறித்த ஆதனத்தை ஆண்டனுபவித்து வந்திருந்தார் எனவும், அவரது இறப்பின் பின்னர் குறித்த ஆதனம் அவரது ஏகவாரிசான குறித்த நவரத்தினம் சத்தியமூர்த்தி பெண் பகவதியை வந்தடைந்த பிதாவழி முதுசமும், நீண்டகால ஆட்சியுமாகும் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் 1439/01.09.2022ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**லலிதா ஜெயசீலன்** ஆகியவர் குறித்த ஆதனத்தினைப் பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1486/31.10.2022ஆம் இலக்க உறுதியால் குறித்த **நவரத்தினம் சத்தியமூர்த்தியும் பெண் பகவதியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்

குறித்த **லலிதா ஜெயசீலன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **லலிதா ஜெயசீலன்** ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (3851)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 52/4, தாவளை ஒழுங்கை, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, தாவளை ஒழுங்கையிலுள்ள இல: 52/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **செல்லப்பா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **லீலாவதி கந்ததாசும் (முன்பு சண்முகம் மகள்), புனிதவதி சிவசம்புவும் (முன்பு சண்முகம் மகள்)** ஆகியவர்கள் குறித்த ஆதனம் தங்களின் தாயார் சண்முகம் பெண் நாகம்மாவின் சீதன ஆதனமாக இருந்து, அவர் இறக்க அவரின் பிள்ளைகளாகிய தங்கள் இருவரையும் தாய்வழி முதுசமாக வந்தடைந்ததென்றும், குறித்த ஆதனம் தங்கள் தாயின் சொந்தமும், நீண்டகாலப் பிசகு தடையற்ற ஆட்சியுமாய் இருந்ததென்றும், அவவின் இறப்பின் பின் தங்களது சொந்தமும் ஆட்சியுமாய் இருந்து வருகின்றதென்றும் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 978/27.10.2003ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**அருளம்பலம் கேதீஸ்வரன் பெண் சியாமளா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 980/27.10.2003ஆம் இலக்க உறுதியால் குறித்த **லீலாவதி கந்ததாசும், புனிதவதி சிவசம்புவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை சுப்பிரமணியம் இராமநாதனும் பெண் பராசக்தியும் ஆகியவர்களின் சீவிய உரித்துக்கமைவாக அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**சுப்பிரமணியம் இராமநாதனும் பெண் பராசக்தியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1688/01.08.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அருளம்பலம் கேதீஸ்வரனும் பெண் சியாமளாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**கணபதிப்பிள்ளை ஜெயசீலன் பெண் சியலதா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1689/01.08.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பிரமணியம் இராமநாதனும் பெண் பராசக்தியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினைச் சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **கணபதிப்பிள்ளை ஜெயசீலன் பெண் சியலதா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கணபதிப்பிள்ளை ஜெயசீலன் பெண் சியலதா**ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (3819)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பென்குயின்கள், சீல்கள் மாத்திரம் வசிக்கும் இரண்டு தீவுகளிற்கும் வரி விதித்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் வரிகள் விதிக்கப்பட்ட நாடுகளில் பென்குயின்கள் மற்றும் சீல்கள் மாத்திரம் காணப்படும் அன்டார்டிக்கின் தீவுகளும் இடம் பெற்றுள்ளமை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அவுஸ் திரேலியாவின் தென்மேற்கே 4000 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஹேர்ட் மற்றும் மக் டொனால்ட் தீவுகளே இவை.

பேர்த்திலிருந்து படகு மூலம் மாத்திரம் இங்கு செல்ல முடியும். ஏழு நாட்கள் பயணம். இதனை விட முக்கியமாக கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக மனிதர்கள் அங்கு சென்றதில்லை.

அமெரிக்க பொருட்கள் மீதான நியாயமற்ற வரிகளிற்கு பதிலடியாக புதிய வரி திட்டத்தை அறிவிப்பதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் புதிய வரியை அவுஸ்திரேலியாவின் வேறு சில பிரதேசங்களும் எதிர்கொண்டுள்ளன.

அவற்றை தவிர நோர்வேயின் தீவுக்கூட்டமான ஸ்வால் பார்ட், போக்லான்ட் தீவுகள், பிரிட்டிஸ் இந்திய பெருங்கடல் பிரதேசம் ஆகியனவும் இந்த வரி பட்டியலில் உள்ளன.


இது உலகின் எந்த பகுதியும் ட்ரம்பின் வரிகளில் இருந்து தப்பமுடியாது - பாதுகாப்பானதல்ல என்பதை வெளிப்படுத்தியுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ் திரேலியாவின் ஏனைய பகுதிகளைப் போல ஹேர்ட் அன்ட் மக்டொனால்ட் தீவுகள் மற்றும் கொக்கோஸ் தீவுகள் கிறிஸ்மஸ் தீவுகள் ஆகியன ட்ரம்பின் பத்து வீத வரியை எதிர்கொள்கின்றன.

ஹேர்ட் தீவு முற்றிலும் பனிக்கட்டிகள் நிறைந்த மக்கள் வசிக்காத பகுதியாகும். அவுஸ்திரேலியா வின் மிகப் பெரிய எரிமலை யான பிக்பென் இங்கேயே காணப்படுகின்றது.

இந்தத் தீவு பெருமளவிற்கு பனிப்பாறைகளால் மூடப்பட்டதாக காணப்படுகின்றது.

இறுதியாக 2026 ஆம் ஆண்டிலேயே மனிதர்கள் இந்தத் தீவுக்குச் சென்றுள்ளார்கள். (நி-8)



## தென்கொரிய ஜ
## அரசியலமைப்பு நீதிம

(சியோல்)

**தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோலை அரசியலமைப்பு நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை பதவி நீக்கம் செய்தது.**



கடந்த ஆண்டு நாட்டின் மிக மோசமான அரசியல் நெருக்கடியைத் தூண்டிய குறுகிய கால இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தியதற்காக பாராளுமன்றத்தின் பதவி நீக்கத் தீர்மானத்தை அந்த நீதிமன்றம் உறுதி செய்தது.

யூன் பதவி நீக்கம் செய்யப்பட்டவுடன், நாட்டின் அரசியலமைப்பின்படி 60 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்கும் வரை பிரதமர் ஹான் டக்-சூ தற்காலிக ஜனாதிபதியாகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

அரசியலமைப்பின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஜனாதிபதியாக தனது கடமையை மீறியதாகவும், அவரது செயல்களின் விளைவு ஜனநாயகத்திற்கு கடுமையான சவாலாகவும் இருந்ததாக தற்காலிக தலைமை நீதிபதி மூன் ஹியுங்-பே தெரிவித்தார்.

எட்டு நீதிபதிகள் மத்தியில் இந்தத் தீர்ப்பு ஒருமனதாக வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே யூனைப் பதவி நீக்கம் செய்யக் கோரி நடைபெற்ற பேரணியில் இரவு முழுவதும் முகாமிட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மேற்கண்ட தீர்ப்பு வெளியானதும் "நாங்கள் வென்றோம்!" என்று கோஷமிட்டனர்.

தென்கொரியாவின் வளர்ச்சி குறைந்து வரும் நேரத்தில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய நிர்வாகத்தை சமாளிக்கும் முயற்சிகளை மறைத்த பல மாத அரசியல் கொந்தளிப்புக்கு



## தோண்டத் தோண்ட கிடைக்கும் சடலங்கள் மியன்மாரில் பலி எண்ணிக்கை உயர்வு



(பாங்கொக்)

மியன்மாரில் அடுத்தடுத்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை மூவாயிரத்தை தாண்டியுள்ளது.

மியன்மாரில், கடந்த மாதம் 29 ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில், மியன்மாரின் பெரும்பாலான நகரங்கள் உருக்குலைந்து போயின. வானுயர கட்டடங்கள் சரிந்து விழுந்ததில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டு ஒருவாரம் ஆன நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

சாலைகளில் விரிசல்கள் ஏற்பட்டதால், மீட்புப் பணிகளை மேற்கொள்வது சவாலாக உள்ளது

இந்த நிலையில், நில நடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3,145 ஆக அதிகரித்துள்ளது. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப் படுகிறது.

இது குறித்து தலைநகரில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் மவுங் மவுங் ஓன் கூறுகையில், "4,589 மக்கள் காயமடைந்துள்ளனர். 221 பேர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குமருந்து, உணவு மற்றும் தங்குமிடங்களை, அரசுடன் இணைந்து பல தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார். (நி-8)

## இதயங்களை இ
## பிரதமர் பே

(பாங்கொக்)

கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை இராமாயணம் இணைக்கிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் சென்றடைந்த பிரதமர் நரேந்திரமோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலும், தாய்லாந்துவாழ் இந்தியர்கள் அதிக அளவில் திரண்டு. இந்திய தேசியக் கொடிகளை கைகளில் ஏந்தியவாறு பிரதமர் மோடிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

வேத மந்திரங்களை ஓதியும், பாரம்பரிய நடனங்களை ஆடியும் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். அவர்களுடன் பிரதமர் மோடி புகைப் படங்களையும் எடுத்துக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி யூன்

# மன்றால் பதவி நீக்கம்

ல
க்

கொள்
ரியாக
கவும்,
ளைவு
யான
காலிக
வியுங்-

தியில்
வழங்
தெரி

பதவி
பெற்ற
முகா
கான
வெளி
றாம்!"

ார்ச்சி
அமெ
ட்ரம்
ாளிக்
த பல
புக்கு



மத்தியில் இந்த தீர்ப்பு வந்துள்ளது.

ஜனவரி 15 ஆம் திகதி கைது செய்யப்பட்ட முதல் தென் கொரிய ஜனாதிபதியாக அவர் ஆனார். ஆனால் நீதிமன்றம் அவரது கைது பிடியாணையை இரத்து செய்த பின்னர் மார்ச் மாதம் விடுவிக்கப் பட்டார்.

"அரச விரோத" கூறுகளை வேரறுக்கத் தேவை என்று அவர் கூறி கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி இராணுவச் சட்டத்தை யூன் அறிவித்ததாலும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி தனது பாராளுமன்ற பெரும்பான்மையை துஷ்பிரயோகம் செய்ததாகவும், அது நாட்டை அழிப்பதாகக் கூறியதாலும் இந்த நெருக்கடி ஏற்பட்டது.


பாராளுமன்றத்தை மூட பாதுகாப்புப் படையினரின் முயற்சிகளை சட்டமியற்றுபவர்கள் மீறி அதை நிராகரிக்க வாக்களித்ததை அடுத்து, ஆறு மணி நேரத்திற்குப் பிறகு யூன் ஆணையை நீக்கினார்.

அவசரகால இராணுவ ஆட்சியை முழுமையாக அமுல்படுத்த தான் ஒரு போதும் விரும்பவில்லை என்றும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கூறி, அதன் விளைவைக் குறைத்து மதிப்பிட முயன்றதாகவும் யூன் தெரிவித்தார்.

பல மாதங்களாகப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. யூனின் இராணுவச் சட்டப் பிரகடனத்தால் ஏற்பட்ட அரசியல் குழப்பம் இப்போது நீதிமன்றத் தீர்ப்பால் தணிக்கப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. (நி-8)

## அமெரிக்காவுக்கு எதிராக

## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட கனடா



(ஒட்டாவா)

"அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப் பாகங்களுக்கு 25 சத விகிதம் வரி விதிக்கப்படும்" என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளில் பொருட்களுக்குப் பரஸ்பர வரி விதிப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமுலுக்குக் கொண்டு வந்தார்.

கனடா மற்றும் மெக்சிக்கோ நாடுகளுக்கு புதிய வர்த்தக வரியை அமெரிக்கா விதிக்கவில்லை என்றாலும் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எக்கு, அலுமினியம் மற்றும் வாகனங்களுக்கு 25 சத விகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகன உதிரிப் பாகங்களுக்கும் 25 சதவிகிதம் வரி விதிக்கப் படும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது, 'எமது வாகனங்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் விதித்துள்ள வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, எமது வர்த்தக ஒப்பந்தத்துக்கு இணங்காத அனைத்து அமெரிக்க வாகன உதிரிப் பாகங்களுக்கும் 25 சதவிகிதம் வரி விதிக்கப்படும்.

அதன்மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் கனடா வாகன உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்றுறைக்காக பயன்படுத்தப்படும்.

ட்ரம்ப் விதித்த வரியைப் போன்று எங்களின் வரி, வாகன உதிரிப் பாகங்களை பாதிக்காது. எங்களின் விநியோகச் சங்கிலியின் நன்மைகள் எங்களுக்குத் தெரியும். கனடாவில் உற்பத்தி மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் உதிரிப்பாக உற்பத்தியாளர்களுக்கு ஆதரவான கட்ட மைப்பை கனடா உருவாக்கும்' இவ்வாறு மார்க் கார்னி தெரிவித்துள்ளார். (நி-8)

# ள இணைக்கும் இராமாயணம்


# ர் மோடி பெருமிதம்

ளின்
ணம்
மோடி

சன்ற
டிக்கு
ற்சாக

இந்
ண்டு,
களை
தமர்
தெரி

யும்,
டியும்
யைப்
ர்களு
கைப்
டார்.



பின்னர், தலைநகர் பாங்கொக்கில், அந்நாட்டு கலைஞர்கள் நிகழ்த்திய இராமாயண நாட்டிய நாடகத்தைப் பிரதமர் மோடி ரசித்து பார்த்தார்.

இந்தப் புகைப்படத்தைச் சமூக வலைத்தளத்தில் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார். அவர், "ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்களின் இதயங்களை இராமாயணம் இணைக்கிறது" என்று பதிவிட்டுள்ளார். (நி-8)

# அமெரிக்காவில் முதலீடுகளை நிறுத்த பிரான்ஸ் ஜனாதிபதி அழைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் திட்டமிடப் பட்ட முதலீட்டை ஐரோப்பிய நிறுவனங்கள் நிறுத்தி வைக்க வேண்டும் என்று பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அழைப்பு விடுத்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க இறக்குமதிகள் மீதான உலகளாவிய வரிகளை உயர்த்துவதாக அறிவித்ததைத் தொடர்ந்து பிரெஞ்சு ஜனாதிபதியின் இந்த அழைப்பு வந்தது.

அமெரிக்காவுடன் விடயங்கள் தெளிவுபடுத்தப்படும் வரை வரவிருக்கும் முதலீடுகள் அல்லது அண்மைய வாரங்களில் அறிவிக்கப்பட்ட முதலீடுகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று பிரெஞ்சு தொழிற்றுறை பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது மக்ரோன் தெரிவித்தார்.

பிரெஞ்சு கப்பல் நிறுவனமான CMA CGM, அமெரிக்காவில் கப்பல் தளபாடங்கள் மற்றும் முனையங்களை கட்ட 20 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக அறிவித்த சில வாரங்களுக்குப் பின்னர் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன. அந்தத் திட்டத்தை அப்போது ஜனாதிபதி ட்ரம்ப் பாராட்டினார்.

பிரெஞ்சு மின் உபகரண விநியோகஸ்தர் ஷ்னைடர் எலக்ட்ரிக், அமெரிக்காவில் புதிய கிளையைத் திறக்கிறது.

கடந்த மாத இறுதியில் அமெரிக்க எரிசக்தி உட்கட்டமைப்பை ஆதரிக்க நாட்டில் 700 மில்லியன் டொலர்களை முதலீடு செய்வதாகக் கூறியது.

மக்ரோனின் திட்டம் குறித்த கருத்துக்கான ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையின் கோரிக்கைகளுக்கு இரு நிறுவனங்களும் உடனடியாக பதிலளிக்கவில்லை.

ட்ரம்பின் வரிவிதிப்புகளுக்கு இதுவரை எந்த பதிலும் இல்லை என்று மக்ரோன் தெரிவித்தார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகத்தைப் பாதுகாக்க ஒரு கருவியான வற்புறுத்தல் எதிர்ப்பு பொறிமுறையைப் பயன்படுத்தவும் அமெரிக்க பொருளாதாரத்தின் டிஜிட்டல் சேவைகள் மற்றும் நிதி வழிமுறைகளை இலக்காகக் கொண்ட பதில்களைப் பயன்படுத்தவும் பரிந்துரைத்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் ஓய்வூதியம் கணிக்கப்படும் முறை



அன்பு ஜவஹர்ஷா

இன்று பல்வேறு வகையில் ஓய்வூதியம் பெறுகின்ற வர்களும் எதிர்காலத்தில் ஓய்வூதியம் பெற வுள்ளவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் இது. எவ்வாறு தமக்கு ஓய்வூதியம் இறுதியாகப் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது என்பதும் எதிர்காலத்தில் எவ்வாறு அது கணக்கிடப்படும் என்பதும் இந்த ஆக்கத்தில் உள்ளது.

இவைகள் அரசாங்க காரியால யங்களின் ஓய்வூதியத்திற்குப் பொறுப் பாக கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களும் அவர்களது மேற் பார்வையாளர்களும் செய்ய வேண் டிய பணியாகும். அவர்களுக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவும் அனு பவமும் இருக்கும். ஆகவே இந்த ஆக்கம் அவர்களுக்குரியது அல்ல.

ஓய்வு பெறும் அரச ஊழியர் ஒருவர் தாம் இறுதியாக கடமை யாற்றும் காரியாலங்களிருந்து ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். இங்குள்ள கணிப் புக்கள் மூலம் பெறப்படும் தொகைக்கு கையொப்பம் இடப்பட வேண்டியிருக் கும். இதை ஏற்றுக் கொள்ள வேண் டியிருக்கும். ஆகவே தமது ஓய்வூ தியம். பணிக்கொடை தொடர்பாக தெளிவுபெறவே இங்குள்ளவாறு விளக்கம் தருகின்றேன். இங்குள்ள மூன்று அட்டவணை களில் முதலா வது குறைக்கப்பட்ட ஓய்வூதியம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்று காட்டுகின்றது. இரண்டாவது அட் வணை குறைக்கப்படாத ஓய்வூ தியம் எவ்வாறு கணக்கிடப்படு கின்றது என்பதையும் காட்டுகின்றது.

மூன்றாவது அட்டவணை ஓய்வு பெறும் போது ஓய்வுப் பணிக் கொடையை பெற விருப்பம் தெரி வித்தால் 10 வருடங்களுக்கு குறைக் கப்பட்ட ஓய்வூதியமே உரிய அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக் கும். இந்தக் கணிப்பு இறுதியாகப் பெற்ற சம்பளத் தையும் அவரின் ஓய்வூதியத் துடனான சேவைக் காலத்தையும் வைத்தே கணக் கிடப்படும். 2020.01.01 சம்பளத் தின் படி இறுதியாக வெளியிடப்பட்ட அட்டவணையானது 25 வருடங்கள் தொடக்கம் ஆறு மாத்ததிற்கு ஒரு வீதம்கூடும் என்ற அடிப்படையிலேயே இருந்தது.

ஆசிரியைகளும் வேறு பெண் ஊழியர்களும் 20 வருடத்தில் ஓய்வு பெறுவதால் 20 வருடத்தை அடிப்ப டையாகக் கொண்டு இந்த அட்டவணையைத் தயாரித் துள்ளேன். ஓய்வூதியச் சுற்றிக்கையின்படி இது ஆறு மாதத்திற்கு ஒரு வீதம் கூடும். இங்கு வருடம் என்று கணித்துள்ளபடியால் இரண்டு வீதம் கூடுகின்றது. 27 வருட சேவைக்குப் பின்னர் குறைவாகச் சம்பளம் பெறுகின்றவர் களுக்கு சில அனுகூலங்கள் உண்டு. இந்த அட்டவணையினைத் தெளிவாக அவதானித்தால் அது தெரியும். இதன்படி முதலாவது அட்டவணை தொடர்பான நடைமுறையிலுள்ள தகவல்களாகும். இது தொடர்பான இரண்டு அட்டவணைக்கும் 2024.12.31 வரை நடை முறையில் உள்ள 2020.01.01 முதல் செயற்படும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வையாகும். 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் சம்பளம் தொடர்பாக புதிய சுற்றிக்கை வெளியாக வேண் டும். அதுவும் 2020.01.01 முதல் கிடைக்கும் சம்பளத்திற்கு நேரொத்ததாக இருக்க வேண்டும் என்பதால் பெரிய வித்தியாசம் இருக்க மாட்டாது.

முதலாம் அட்டவணையில் உள்ள ஓய்வூதியத்தை 10 வருட காலத்திற்கு ஓய்வூதியர்கள் பெறுவார்கள். இதையே இந்த முதலாம் அட்டவணை் (Reduced pension) என்று காட்டுகின்றது.

அடுத்த அட்டவணை குறைக்கப்படாத ஓய்வூதி யம் (Unreduced pension) தொடர்பானதாகும். ஓய்வு பெற்று 10 வருடங்களுக்கு கிடைக்கும் ஓய்வூதியம் பற்றிய அட்டவணையேயாகும். கவனித்துப் பார்த்தால் பொதுவாக முன் அட்டவணையை விட 10 வீதம் அதிகரித்த வீதமே காட்டப்பட்டு இருக்கும். இந்த இரண்டு அட்டவணைகளும் ஓய்வு பெறும் போது பெற்ற சம் பளத்தின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டிய வீதங் களே குறித்து காட்டப்படுகின்றது.

10 வருடங்ளுக்குப் பின்னர் கிடைக்கும் இந்த குறைக்கப்படாத ஓய்வூதியத்தின் அடிப்படையில்தான் ஓய்வூதியப் பணிக்கொடை 24 மாதங்களால் பெருக்கியே இது வழங்கப்படும். வரவு செலவுத் திட்டம் வெளிவந்த சமயத்திலே ஓய்வூதியமும் பணிக்கொடையும் 2027 ஆம் ஆண்டு கிடைக்கவுள்ள சம்பளத்தின் படி கணிக்கப்படும் என எனது ஆக்கங்களில் தகவல்கள் சொல் லப்பட்டு இருந்தன. ஆனால் 10/ 2025 ஆம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை வந்த பின்பு ஓய்வூதியம் 2027 ஆம் ஆண்டு சம்பளத்தின் படியும் ஓய்வூதியப் பணிக்கொடை 2026.12.31 இற்கு முன்னர் ஓய்வு பெறும் காலத்தில் எடுக் கும் சம்பளத்தின் படியுமே செய்யப்பட்டு கிடைக்கவுள்ளது.

அடுத்துள்ள ஓய்வூதியம் பணிக்கொடை தொடர் பான அட்டவணை. அதில் தலைப்பைத் தவிர மற்றைய விடயங்கள் ஆங்கிலத்திலேயே உள்ளது என கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 1-22 இலக்கமிடப் பட்டுள்ளது இந்த அட்டவணை எந்தச் சுற்றறிக்கை யிலும் இல்லாத விடயமாகும். 1-4 வரை பொதுவான தகவலாகும். 2027 இல் இந்த ஊழியருக்கு கிடைக்க வுள்ள சம்பளத்தின் படியே 9ஆம் இலக்கத்தில் உள்ள குறைக்கப்பட்ட ஓய்வூதியம் உள்ளது. 15-22 வரை இவருக்கு கிடைக்கும் ஓய்வூதியத் தகவல்கள் உள்ளன.

11 ஆம் இலக்கத்தில் இவர் ஓய்வு பெறும் போது பெற்ற சம்பளத்தின்படியே 85 வீதம் ஓய்வூதியப் பணிக் கொடை கணிக்கப்பட்டுள்ளது. இத் தொகை அட்டவ ணையின் இறுதியிலும் காட்டப்பட்டுள்ளது.

இந்த பணிக் கொடையால் 11 வீதம் என்ற அடிப் படையில் முழுமையாக கழிக்க முடியாது. மிகுதியை 14 ஆம் இலக்கத்தில் உள்ளதை அரசாங்கம் விட்டுத்தரும்

இந்த அட்டவணையில் 22 விடயங்கள் சொல்லப் பட்டு இருந்தாலும் 8, 9, 10, 11 போன்ற விடயங்கள் முக்கியமானவையாகும். 30 வருட சேவையை முடித் துள்ளபடியாலும் உச்ச மட்டத்தில் சம்பளமொன்றில் இருப்பதாலும் இந்தப் பகுதிக்கு 75 சதவீதம் ஓய்வூ தியம் கிடைக்கும்.

உங்களது தகவல்களை 077 454 3320 என்ற வட்ஸ் அப் இலக்கத்திற்கு தந்தால் உள்ள சுற்றறிக்கைப் படி கிடைக்க வேண்டிய ஓய்வுதிய பணிக் கொடை விபரங்கள் தரலாம்.

குறைக்கப்பட்ட ஓய்வூதியம் கணிக்கப்படும் முறை

**Pension Calculation(Reduced Pension)as per Last Salary & Total Service from 2020.01.01**

| Last Basic Salary | | Years & Reduced Pension Percentage | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 35 | 40 |
| 1.00 | 28,100.00 | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 85% | 85% |
| 28,101.00 | 28,640.00 | 64% | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 84% | 84% |
| 28,641.00 | 29,540.00 | 63% | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 83% | 83% |
| 29,541.00 | 30,490.00 | 62% | 64% | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 82% | 82% |
| 30,491.00 | 31,340.00 | 61% | 63% | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 81% | 81% |
| 31,341.00 | 36,745.00 | 60% | 62% | 64% | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 80% | 80% |
| 36,746.00 | 48,375.00 | 59% | 61% | 63% | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 79% | 79% |
| 48,376.00 | 62,300.00 | 58% | 60% | 62% | 64% | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 78% | 78% |
| 62,301.00 | 66,305.00 | 57% | 59% | 61% | 63% | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 77% | 77% |
| 66,306.00 | 78,345.00 | 56% | 58% | 60% | 62% | 64% | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 76% | 76% |
| 78,346.00 | Up | 55% | 57% | 59% | 61% | 63% | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 75% | 75% |

Compiled by Anbu Javaharsha

குறைக்கப்படாத ஓய்வூதியம் கணிக்கப்படும் முறை

**Pension Calculation(Unreduced Pension)as per Last Salary & Total Service from 2020.01.01**

| Last Salary | | Years & Unreduced Pension Percentage | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 35 | 40 |
| 1.00 | 28,100.00 | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 87% | 89% | 90% | 90% | 90% | 90% | 90% |
| 28,101.00 | 28,640.00 | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 86% | 88% | 90% | 90% | 90% | 90% | 90% |
| 28,641.00 | 29,540.00 | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 87% | 89% | 90% | 90% | 90% | 90% |
| 29,541.00 | 30,490.00 | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 86% | 88% | 90% | 90% | 90% | 90% |
| 30,491.00 | 31,340.00 | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 87% | 89% | 90% | 90% | 90% |
| 31,341.00 | 36,745.00 | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 86% | 88% | 90% | 90% | 90% |
| 36,746.00 | 48,375.00 | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 87% | 89% | 89% | 89% |
| 48,376.00 | 62,300.00 | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 86% | 88% | 88% | 88% |
| 62,301.00 | 66,305.00 | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 87% | 87% | 87% |
| 66,306.00 | 78,345.00 | 66% | 68% | 70% | 72% | 74% | 76% | 78% | 80% | 82% | 84% | 86% | 86% | 86% |
| 78,346.00 | Up | 65% | 67% | 69% | 71% | 73% | 75% | 77% | 79% | 81% | 83% | 85% | 85% | 85% |

Compiled by Anbu Javaharsha

ஓய்வூதியம். பணிக்கொடை தயாரித்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | Retirement date | | | 02.08.2025 | |
| 2 | Total Service | | | 35 Years 2 Months | |
| 3 | Annual Increment date | | | 01.08.2025 | |
| 4 | Service Category | | | Sri Lanka Prncipals Service-1 | |
| | | | | Monthly | Yearly |
| 5 | Monthly Salary at date of Retirement(Schedule-11) | | | 142,920.00 | 1,715,040.00 |
| 6 | Earned Increments 000 days | | | | - |
| 7 | Pensionable Allowance | | | | |
| 8 | Consolidated Salary for Pension Calculation | | | 142,920.00 | 1,715,040.00 |
| 9 | Reduced Pension | 75% | | 107,190.00 | |
| 10 | Unreduced Pension | 85% | | 121,482.00 | |
| 11 | Salary at 01.08.2025(Schedule-111) | 108,638.00 | X 85% | 92,342.30 | |
| 12 | Pension Gratuity | 92,342.30 | X 24 | 2,216,215.20 | |
| 13 | 10 Years Deduction | 14,292.00 | X 120 | 1,715,040.00 | |
| 14 | Balance (Free) | | | 501,175.20 | |

| | Monthly Reduced Pension | | Monthly Unreduced Pension | |
|---|---|---|---|---|
| 15 | Full Month Pension on 2025 August(30 days) | | Full Month Pension on 2035 August | |
| 16 | Monthly Pension | 103,732.26 | Monthly Pension | 121,482.00 |
| 17 | C.L.A | 5,830.65 | C.L.A | 6,025.00 |
| 18 | Special allowance | | Special allowance | |
| 19 | Other Allowance | | Other Allowance | |
| 20 | Total Pension | 109,562.91 | Total Pension | 127,507.00 |
| 21 | Less Agrahara | 200.00 | Less Agrahara | 200.00 |
| 22 | Balance Pension | 109,362.91 | Balance Pension | 127,307.00 |
| | | | Pension Gratuity | 2,216,215.20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய

# வருடாந்த பங்குனி உத்தர பொங்கல்

## விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமானது



(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக காணப்படுகின்ற கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம் விளக்கு வைத்தல் பூசையுடன் பிரம்பு வழங்கும் வைபவம் ஆரம்பமாகியது.

இதனைத் தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி பண்டமெடுத்து வருவதற்காக மாட்டு வண்டிகளில் பக்தர்கள் யாழ். புத்தூர் பண்டமரவடிக்கு சென்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 11ஆம் திகதி இரவு நடைபெற உள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் குறித்த ஆலயத்தில் பகல் 12 மணிக்கு ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பிரம்பு வழங்கும் வைபவம் நடைபெற்றதையடுத்து யாழ் தென்மராட்சி புத்தூர் சந்தியிலுள்ள பண்டமரவடிக்கு சென்று பொங்கலுக்கான பண்டம் எடுத்து வரும் மரபுகளுக்கு அமைய பிற்பகல் மாட்டு வண்டிகளில் தொண்டர்கள் ஆலய முன்றலில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

தொன்று தொட்டு பேணப்படும் மரபுகளுக்கு அமைவாக இவ்வாறு புறப்பட்ட இவர்கள் யாழ் மீசாலை புத்தூர் சந்தியில் அமைந்துள்ள பண்டமரவடிக்கு சென்று அங்கேயே தங்கியிருந்து பொங்கலுக்கான பொருட்களை எடுத்துக் கொண்டு, எதிர்வரும் 11 ஆம் திகதி ஆலயத்தை வந்தடைந்து, அங்கே பொங்கல் வழிபாடுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8-315)



## வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

### காலாவதியான பொருட்கள் அழிப்பு

(முல்லைத்தீவு)

உடையார்கட்டு பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட காலாவதியான உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் எரித்து அழிக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் புதுக்குடியிருப்புப் பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில் குறித்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன்போது காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்ட நிலையில் அவை அழிக்கப்பட்டன. (நி-8-299)

# மாற்றுவலுவுடையோருக்கான தேசிய மட்ட விளையாட்டுப்போட்டி

## முதலிடத்தை தனதாக்கியது கிளிநொச்சி







(தருமபுரம்)

2025 ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட மாற்று வலுவுடையோருக்கான விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஹோமாகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

25 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப் போட்டியில் மாற்றுவலுவுள்ளோர் கலந்து கொண்டனர்.

குறித்த போட்டியில் கிளி நொச்சி மாவட்டம் 50 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

43 புள்ளிகளைப் பெற்று கம்பஹா மாவட்டம் இரண்டாம் இடத்தினையும் 36 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு மாவட்டம் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டன. (நி-8-31[illegible])



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 420 | 350 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 600 | 600 |
| தக்காளி | 250 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 220 | 200 |
| கோவா | 250 | 350 | 350 | 200 |
| கரட் | 550 | 550-700 | 700 | 650 |
| பூசணி | 200 | 200 | 160 | 200 |
| புடோல் | 250 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 250 | 200 |
| பாகற்காய் | 450 | 550 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 250 | 300 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 400 | 250 | 400 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 2000 | 2500 |
| போஞ்சி | 600 | 550 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 450 | 200 | 500 |
| கீரை – 1 பிடி | 140 | 100-120 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 160-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 400 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 500 |
| முள்ளங்கி | 140 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 |
| [illegible] | 150 | -- | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

740





சிறிது அருகில் அப் பரிவாரங்கள் நெருங்கி வந்ததும் கட்டியக்காரர்களின் முழக்கம் தெளிவாகக் கேட்டது.

"பன்னிரண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர், வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி, இரட்டை மண்டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம், தொண்டை மண்டலாதிபதி, வடதிசை மாதண்டநாயகர், மூன்று உலகமுடைய சுந்தரசோழ சக்கரவர்த்தியின் திருமகனார், ஆதித்த கரிகால சோழ மகாராஜா வருகிறார்! பராக்!"

இடி முழக்கக் குரலில் எட்டுத் திசையும் எதிரொலி செய்யும்படி எழுந்த இந்தக் கோஷத்தைக் கேட்டதும் கெடில நதித்துறையில் இருந்தவர் அனைவரும் அவசர அவசரமாகக் கரையேறினார்கள். அத்தகைய வீராதி வீரனைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் நதிக்கரையின் நடுவில் வழி விட்டுவிட்டு இருபுறமும் அவர்கள் ஒதுங்கி நின்றார்கள்.

கட்டியக்காரர்கள், எக்காளம் ஊதுவோர், பரிச்சின்னம் ஏந்துவோர் ஆகியவர்கள் முதலில் வந்து தண்ணீர்த் துறையை அடைந்தார்கள். பரிவாரங்களுக்குப் பின்னால் மூன்று குதிரைகள் ஒன்றின் பக்கம், ஒன்றாக வந்தன, மூன்று குதிரைகள் மீதும் மூன்று இளம் வீரர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களைத் தூரத்தில் பார்த்த போதே ஜனங்கள் அவர்களைச் சுட்டிக் காட்டி இன்னார் இன்னவர் என்று பேசத் தொடங்கினார்கள். "நடுவில் உள்ள குதிரை மீது வருகிறவர்தான் ஆதித்த கரிகாலர்! பொற் கிரீடத்தைப் பார்த்தவுடனே தெரியவில்லையா? வெய்யில் படும்போது எப்படி கிரீடம் ஜொலிக்கிறது!" என்றான் ஒருவன்.

"இந்தக் கிரீடத்தைப் போய்ச் சொல்லப் போகிறாயே? கரிகால்வளவன் அணிந்திருந்த மணி மகுடத்தை இவர் சிரசில் தாங்கும் போதல்லவா பார்க்க வேண்டும்? அது கோடி சூரியப் பிரகாசமாகக் கண்கள் கூசும்படி ஜொலிக்குமாம்!" என்றான் இன்னொருவன்.

"அது கரிகால்வளவன் கிரீடம் அல்ல தம்பி. அப்படிச் சம்பிரதாயமாகச் சொல்வது தான். பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் செய்த மணி மகுடத்தைத் தான் இப்போது சுந்தர சோழர் அணிந்திருக்கிறார். இன்னும் எத்தனை நாளைக்கோ, தெரியவில்லை!" என்றான் மற்றொருவன்.

"சுந்தர சோழரின் வாழ்நாளை இப்படித்தான் சில காலமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சிரஞ்சீவியாயிருப்பார் என்று தோன்றுகிறது" என்றான் முதலில் பேசியவன்.

"நன்றாயிருக்கட்டும். அவர் உயிரோடிருக்கும் வரையில் நாடு நகரமெல்லாம் குழப்பமில்லாமலிருக்கும்."

"அப்படியும் சொல்வதற்கில்லை. பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டுவிட்டதாகச் செய்தி வந்ததிலிருந்து, சோழ நாடெங்கும் ஒரே அல்லோல கல்லோலமாயிருக்கிறதாம். எப்போது சண்டை மூளுமோ என்று அங்கிருந்து வந்தவர்கள் எல்லாம் சொல்லி வருகிறார்கள்." "யாருக்கும் யாருக்கும் சண்டை? எதற்காகச் சண்டை?" "பழுவேட்டரையர்களுக்கும், கொடும்பாளூர் வேளாளருக்கும் சண்டை மூளும் என்று சொல்கிறார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திருட்டு சாமியார் வேஷம்



(நேற்றைய தொடர்ச்சி)

உடனே தன்னுடைய காவலாளிகள் சிலபேரை பயணிகள் மாதிரி உடை அணிய வைத்து அந்த சாமியாரை மாறு வேடத்தில் போய்ப் பார்த்தார். இந்த சாமியார் எப்ப இந்த ஊருக்கு வந்தார் என்று விசாரிச்ச தளபதிக்கு, கோவிலில் திருட்டு சம்பவம் நடந்த நாளோடு அது சரியா பொருந்தியதும் நிறையக் கேள்விகளுக்கு விடை கிடைச்சது. இந்தச் சாமியாரை நாம் திருடன் என்று சொல்லி சோதனை போட்டால் தங்களுடைய நம்பிக்கையைத் தகர்ப்பதாக நினைத்து கிராமத்து மக்கள் நம்மிடம் சண்டைக்கு வருவார்கள் அப்புறம் இந்தச் சாமியாரை விசாரிக்கவே முடியாது என்று அவருக்கு மனதில் தோன்றியது. அதனால ஒரு பெரிய தந்திரத் திட்டதைப் போட்டார். தளபதி ஒருநாள் ஆசீர்வாதம் வாங்குற மாதிரி சாமியாரிடம் போனார் தளபதி, அடடா இந்த சாமியாரா இவரிடம் நான் ஏற்கனவே ஆசீர்வாதம் வாங்கியிருக்கேன், என்னோட திருட்டுப் போன உலக்கையை மீட்டுக் கொடுக்க சொல்லி வேண்டினேன் உடனே வீட்டுக்குள் சென்று மந்திரம் போட்டு என்னுடைய உலக்கையை வரவழைத்துக் கொடுத்தார் என்று எல்லா பக்தர்கள் முன்னாலும் சொன்னார். உடனே கூட்டத்தில இருந்த பக்தர்களுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அப்பத்தான் மாறுவேடத்தில இருந்த இன்னொரு காவலாளி ஐயா கிராமத்தில இருந்த கோவிலில் சாமியினுடைய கிரீடம் காணாமல் போனது. அதை வரவழைத்துக் கொடுங்கள் என்று சொன்னார் அந்தக் காவலாளி. இதைக் கேட்டு கூட்டத்தில இருந்த பக்தர்கள் எல்லாம் அடடா நம்ம கண் முன்னால சாமியோட சக்தியைப் பார்க்கப் போறோம் என்று ஒரே ஆர்வமாகிவிட்டார்கள்.

ஆனால் திருடனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அடடா இது என்ன சோதனை. இப்ப இவர்களுக்கு அந்தக் கிரீடத்தை வரவைத்துக் கொடுத்தாக வேண்டும். இல்லை என்றால் தனக்கு சக்தி இல்லை தான் போலி என்று சொல்லி அடித்துத் துரத்தி விடுவார்கள். அதனால தான் திருடிட்டு வந்த கிரீடத்தையும் நகைகளையும் ஒழித்து வைத்திருந்த இடத்தில இருந்து எடுத்துக் கொடுத்து எல்லோரிடமும் நல்லபேர் வாங்கிடலாம் என்று நினைத்தான். உடனே குடிசைக்குள் சென்ற அந்தப் போலி சாமியார் கொஞ்ச நேரத்துக்குப் பின்பு காணாமல் போன கிரீடத்தோட வெளிய வந்தான். அதைப் பார்த்த எல்லாப் பக்தர்களுக்கும் ஒரே பரவசமாகப் போய் விட்டது. எல்லாரும் இந்த சாமியாருடைய சக்தியைப் பார்த்தீர்களா என்று சொல்லி அவரைப் புகழ்ந்தார்கள். அந்தக் கிரீடத்தை வாங்கிப் பார்த்த காவலாளி அது காணாமல்போன கீரிடம் தான் என்று உறுதி செய்துவிட்டு சாமியாரிடம் வந்தார். வந்தவர் அவருடைய தாடியைப் பிடித்து இழுத்தார், தாடி கையோடு வந்து விட்டது. அப்போது தான் எல்லோருக்கும் புரிஞ்சது அடடா இவர் உண்மையாவே சாமியார் இல்லை போலி என்று தன்னுடைய வேடம் வெளிப்பட்டதால் ஓடிப் போகப் பார்த்தான் திருடன். ஆனால் மாறு வேடத்தில வந்திருந்த மற்றைய காவல்காரர்கள் அவனை மடக்கிப் பிடித்துத் தளபதியிடம் இழுத்துக் கொண்டு போனார்கள். அப்போது தான் தன்னுடைய வேடத்தை கலைத்தார் தளபதி. என்ன நடக்குது என்று ஆவலோடு பார்த்துக் கொண்டு இருந்த கிராமத்து மக்களிடம் யாரு என்ன என்று விசாரிக்காமல் யார் வந்தாலும் சாமியாரா ஏற்றுக் கொள்ளும் உங்கள் அறியாமையை நினைத்து எனக்கு வருத்தமாக இருக்கிறது என்று சொன்னார்.

அதைக் கேட்டு எல்லோரும் வெட்கித் தலை குனிந்தார்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுய மரியாதை மற்றும் முழு மனித குலத்தின் மீதான அன்பே நல்ல நடத்தையை உருவாக்கும்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாரொடு நோவோம் யார்க்கெடுத்து உரைப்போம்

யாழ்ப்பாணம் என்றால் அஃது ஒட்டுமொத்த தமிழர் தாயகத்தையும் குறிப்பதாகும்.

அதேநேரம் யாழ்ப்பாணத் தமிழ் என்றால் அதற்கு இருக்கக்கூடிய மதிப்பும் மரியாதையும் சாதாரணமானதன்று.

ஆம், உலகம் முழுவதும் யாழ்ப்பாணத்துத் தமிழுக்கு தலைவணங்குகிறது எனில் அதற்குக் காரணம் தமிழ்ப் பண்பாடு நம் வாழ்வியலோடு இரண்டறக் கலந்திருப்பதாகும்.

வருவிருந்து காத்திருக்கின்ற உயர்ந்த பண்பாடு நம் யாழ்ப்பாணத்துக்கு உண்டு.

ஆக, பக்தி மொழியாகிய தமிழை தாயினும் மேலாகப் போற்றுகின்ற தகைசால் பேராளர் கள் இந்த மண்ணில் இருந்ததன் காரணமாக நம் தமிழுக்கு உலகளாவிய அளவில் மதிப்பும் மரியாதையும் இருந்தது.

ஆனால் இப்போதெல்லாம் நாம் உயர் பண்பாட்டை, உயர்ந்த பழக்க வழக்கங்களை, மற்றவர்களை மதிக்கின்ற உன்னதத்தையெல்லாம் இழந்து விட்டோம். இப்போது எங்களிடம் கோபமும் குழப்பமுமே எஞ்சி இருக்கிறது.

உண்மை. யாழ்ப்பாணத்தில் உள்ள அரச நிறுவனங்கள் தொடக்கம் தனியார் நிறுவனங்கள் வரையில் அங்கு கடமையாற்றுபவர்களிடம் கோபமும் ஆத்திரமும் கடுஞ் சொல்லும் தாண்டவமாடுகின்றன.

அரச பணிக்கு வந்துவிட்டால் பின்னர் தங்களை எதுவும் செய்ய முடியாது என்ற கர்வம் அவர்களின் தலையில் ஏறிவிடுகிறது.

நேற்று முன்தினம்கூட ஓர் அன்பர், ஒரு தனியார் நிறுவனத்துக்குச் சென்றிருந்தார்.

அங்குள்ள ஒரு சாதாரண பெண் பணியாளர் ஒரு சில நிமிடங்களுக்குள் மிகக் கண் டிப்பான – கடுமையான – எந்தவித இங்கிதமும் இல்லாத வார்த்தைகளைக் கொட்டியதாகக் கூறிய அவர்; வெறும் 15 நிமிடங்கள் தாமத மாகச் சென்றதற்காகவே அந்த இளம் பெண் பிள்ளை இத்துணை தூரம் ஆத்திரமடைந்தார் எனக் கூறித் தனது கவலையை வெளியிட்டிருந்தார்.

இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. இது போல எத்தனையோ உதாரணங்கள் நம் மண்ணில் மலிந்து கிடக்கின்றன.

என்ன செய்வது எப்படியும் எதுவும் எழுதலாம் என்ற நிலைமை வந்த பின்பு, உயர் அதிகாரிகள் எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு எதிராக வசைபாடலாம், மனித உரிமை என்று வாதிடலாம் என்ற நிலைமை வந்து விட்ட பின், யார் என்ன செய்ய முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கையடக்கத் தொலைபேசிகளுடன் ஊடாடுகின்ற இடமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மாறி விட்டன.

இனி எங்கள் யாழ்ப்பாண மண்ணில் வாழ முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

வல்லவர்கள் மட்டும் தர்க்கம் புரிவர். ஈற்றில் அரச கடமை செய்யாமல் தடுத்த குற்றம் என்ற முகதாவில் வல்லவரும் 14 நாள் உள்ளே.

யாரொடு நோவது. அரச பணி செய்யாமல் இருப்பவர்களை 14 நாள் உள்ளே அனுப்புகின்ற சட்டம் இல்லாதவரை, செய்யாத அரச கடமையை தடுத்ததான வாக்குமூலமே வெற்றி பெறும்.

ஓ! கடவுளே நாங்கள் அப்பாவிப் பொதுமக்கள். யாரொடு நோவோம் யார்க்கெடுத் துரைப்போம்.

# நெல், அரிசி விற்பனையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு வழங்க அவகாசம் வழங்குங்கள்

## ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை

சந்தையில் நெல் மற்றும் அரிசி விற்பனையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண தனக்குக் காலவகாசம் வழங்குமாறு விவசாயிகளிடமும் நுகர்வோரிடமும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அநுராதபுரம் சிறிமகா விகாரையில் நேற்று நடைபெற்ற வருடாந்த புத்தரிசி மங்கள நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

விவசாயத்தை முன்னிலைப் படுத்தியதாகவே இலங்கையின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது.

இலங்கையின் பாரம்பரியத்துடன் விவசாயம் தொடர்புபட்டுள்ளது. விவசாயம் மற்றும் விவசாயிகளின் அபிவிருத்திகளுக்கு விசேட திட்டங்களை நாங்கள் செயற்படுத்துவோம்.

விவசாயத்துறையில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்போம். நீர்ப்பாசனத் துறை அபிவிருத்திக்கு போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய பயிர்ச்செய்கையில் விதை குறித்து பிரச்சினைகள் காணப்படுகிறது. விதைகளின் பல வினத் தன்மை இன்று வரையறுக்கப் பட்டுள்ளது. இலங்கைக்கே உரித்தான விவசாய விதை உற்பத்தி அபிவிருத்திகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் தமது விளைச்சலை விற்பனை செய்து கொள்ளும் போது பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அதேபோல் நுகர்வோர் நியாயமான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள். ஆகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் தலையீடு செய்துள்ளது.

சந்தையில் நெல் மற்றும் அரிசி விற்பனையில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஓரிரு போகங்கள் செல்லும். இதற்கு எனக்கு காலவகாசம் வழங்குமாறு விவசாயிகளிடமும், நுகர்வோரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-4)

## யாழ். மாவட்ட செயலகத்தில்

## வடக்கு உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான கலந்துரையாடல்

வடபகுதி உற்பத்தியாளர்களின் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதற்கான கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் நேற்றுக் காலை 09.30 மணியளவில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கு, உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக அபிவிருத்தியினை மேம்படுத்தலாம் எனவும் சம்மேளனத்தின் ஒத்துழைப்பினைப்பெற்று சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு அமைந்துள்ளதாகவும் இச் செயற்பாடு வடக்கு தெற்கிற்கான வியாபார வகையாக அமைந்திருந்தாலும் ஒரு வகையில் நல்லிணக்கச் செயற்பாடாகவும் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டு இந் நிகழ்வினை உள்ளூர் உற்பத்தியாளர்கள் நல்ல சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனம் வட பகுதி உற்பத்தியாளர்களின் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றவகையில் அவர்களது பொருட்கள் சேவைகளை விருத்தி செய்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்பதும் உற்பத்தியாளர்களின் பொருட்களை ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ற தொடர்புகளை மேற்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந் நிகழ்விற்கு ஆளுநர் செயலகம், வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகம் போன்றவற்றின் வழிகாட்டலும் அந்தத் துறைசார்ந்த திணைக்களங்களின் ஒத்துழைப்பும் பெறப் பட்டது.

இந் நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்தி சபை மாகாண பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனத்தின் நிறைவேற்று அதிகாரி, தலைவர் மற்றும் சம்மேளன அங்கத்தவர்கள், தொழிற்துறை மாகாண பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தி மற்றும் துறை சார்ந்த திணைக்களத் தலைவர்கள், வடபகுதி சம்மேளனத் தலைவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (ம-4,33)

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக

## ஷானி அபேசேகரவை பதவியுயர்த்த அனுமதி

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்க தேசிய பொலிஸ் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, கடந்த கோட்டாபய ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், அவர் பொலிஸ் சேவையில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், அவர் கடைசியாக வகித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

எனினும் அவரது கனிஷ்ட அதிகாரிகள் தற்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருக்கும் நிலையில், அவர்களின் கீழ் பணியாற்றுவதில் ஷானி அபேசேகரவுக்கு சிற்சில சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது.

அதனைக் காரணம் காட்டி ஷானி அபேசேகரவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி உயர்வு வழங்க பொலிஸ் திணைக்களம் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது

அதன்பிரகாரம் ஷானி அபேசேகர விரைவில் பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்த்தப்படவுள்ளார். (ம-4)

## தருமபுரம் கல்லாறு காட்டுப் பகுதியில்

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

தருமபுரம் கல்லாறு காட்டுப் பகுதிக்குள் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 2970 போத்தல் கோடாவினை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். தப்பிச்சென்ற சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் தருமபுரம் பொலிஸார் ஈடுபட்டுள்ளார். (ம-4,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இராசி பலன்கள்

## உண்மையும் உழைப்பும் இரு கண்கள் என வாழும் சிம்ம இராசி நேயர்களே



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - களத்திர ஸ்தானத்தில் புதன் , சனி - அஷ்டம ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.04.2025 அன்று சூரிய பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 30.04.2025 அன்று புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சொல்லே உயிர் என்பதற்கேற்ப சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக காட்டி உண்மையும் உழைப்பும் இரு கண்கள் என வாழ்ந்து காட்டும் சிம்ம இராசி நேயர்களே. இந்த மாதம் உங்களின் மனக்கவலைகள் மாறிவிடும். நல்லவர்களின் உதவி உங்கள் மனதை மகிழ்விக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் மற்றவர்களால் வேதவாக்காக ஏற்றுக்கொள்ளப்படும். ஆன்மிக உணர்வுடன் செய்த நற்செயல்கள் தகுந்த பலனைத் தரும். வீடு மனை, வாகன வகைகள் புதியவை வாங்கவும் இருப்பவற்றை சீர்திருத்தம் செய்யவும் நல்வாய்ப்புகள் வந்து சேரும்.

**உத்தியோகத்தர்கள்:** அரச துறை மற்றும் தனியார் துறைகளில் உள்ளவர்கள் தங்கள் பணியின் பொருட்டு பல்வேறு இடங்களுக்குச் சென்று வர நேரலாம். மனதில் புதிய உற்சாகமும் பொருளாதார வரவுகள் எதிர்கால வாழ்க்கையை உயர்த்தும் வகையிலும் பலன்கள் நடக்கும். வியாபாரிகளுக்கு இலாபம் கிடைக்கும். இலாப விகிதங்களை கணக்கில் கொண்டு புதிய மூலதனத்தை தொழிலில் போடுவார்கள். சொகுசான ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழில் நல்ல முன்னேற்றம் அடைந்து மேன்மை பெறுவார்கள்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் நிர்வாகத்திடமிருந்து தேவையான சலுகைகளைப் பெறுவார்கள். சேமிப்புச் செய்து பணத்தை குடும்பத்தின் சுபச்செலவுகளுக்காக பயன்படுத்துவார்கள்.

**கலைத்துறையினர்:** தனக்குள்ள திறமையை நன்கு வளர்த்துக்கொண்டு புதிய வாய்ப்புகளையும் நிறைந்த பொருளாதாரத்தையும் பெற்று மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவார்கள். இசைக் கலைஞர்கள் பாராட்டுப் பெறுவார்கள்.

**அரசியல்வாதிகள்:** அனுகூல செயற்பாட்டைத் தேவையான நேரத்தில் தடையின்றி பெறுவார்கள். பிறருக்கான பணிகள் நடக்கும். ஆன்மிக எண்ணங்கள்




செயற்பாடுகளாக மனதில் ஊற்றெடுப்பதால் தெய்வகாரியங்களை விருப்பத்துடன் செய்வீர்கள்.

**மாணவர்கள்:** வேலை வாய்ப்பு பெறுவார்கள். கல்விச் செலவுக்கு தேவையான பொருளாதார தேவைகள் எளிதாகக் கிடைக்கும். நண்பர்களுடன் உரையாடுவதால் புதிய ஞானம் பிறக்கும். தெய்வ நம்பிக்கை பெருகுவதால் மனம் அமைதியாக இருக்கும்.

**மகம்:** இந்த மாதம் எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். திட்டமிட்டுச் செயற்படுவது வெற்றிக்கு உதவும். பணவரத்து அதிகரிக்கும். அதே நேரத்தில் செலவும் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனத்துணிச்சல் உண்டாகும். அதனால் எதைப் பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம்.

**பூரம்:** இந்த மாதம் குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குடும்பத்திற்கு அதிகபடியான வருமானமும் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே சகஜநிலை காணப்படும். குழந்தைகள் திறமையைக் கண்டு அவர்களைப் பாராட்டுவீர்கள். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும் போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் இலாபம் தருவதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளைக் கவனமாக செய்து முடித்து பாராட்டுப் பெறுவார்கள். செயற்றிறமை அதிகரிக்கும்.


**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று 9 முறை வலம் வரவும் .

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன். வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26

**அதிஷ்ட தினங்கள்:** 18, 19, 20

## பிறருக்கு வழி காட்டும் கன்னி இராசி நேயர்களே



**கிரகநிலை** - ராசியில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன் , சனி - களத்திர ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.04.2025 அன்று சூரிய பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் ராசியில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30.04.2025 அன்று புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இனிமையாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம் பிடித்து தன்னை உணர்ந்து பிறருக்கு வழிகாட்டும் கன்னி இராசி நேயர்களே. இந்த மாதம் கடந்த காலங்களில் இருந்த வீண் செலவுகள் குறைந்து சுபகாரியச் செலவுகள் நிகழும். உங்கள் பேச்சும் செயலும் தெய்வாம்சம் பொருந்தியதாக இருக்கும். தைரியமான செயல்களைச் செய்து தகுந்த புகழை அடைவீர்கள். வீடு மனை, வாகனம் ஆகியவற்றில் ஏற்படும் பராமரிப்புச் செலவுகளை மனமுவந்து செய்வீர்கள்.

**உத்தியோகத்தர்கள்:** அரசு மற்றும் தனியார்துறைகளில் உள்ளவர்களுக்கு பல்வேறு விரயமான செலவுகள் வரலாம். அனைவரையும் அரவணைத்து வேலை வாங்கும் புதிய சிந்தனைகள் உருவாகும். எதிரிகள் கெடுதல் முயற்சிகளை செய்வதால் சிறு சிறு இறக்கங்கள் உருவாகும். வியாபாரிகள் எந்த வியாபாரம் செய்பவராக இருந்தாலும் அவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். காகிதப் பொருட்கள் பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்களை வியாபாரம் செய்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

**பெண்கள்:** குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட விரையமான செலவுகளைப் பற்றி மனதில் எதுவும் எண்ணாமல் நற்பலன்கள் முழுதும் பெற ஆயத்தமாகுங்கள். அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் பெண்கள் புதிய உத்வேத்துடன் செயற்பட்டு மனநிறைவு பெறுவார்கள்.

**கலைத்துறையினர்:** கலைத்துறை சார்ந்தவர்களுக்கு தங்களது முழுத் திறமைகளையும் காட்டினால் மட்டுமே வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும். அடிக்கடி வெளியூர் பயணங்கள் வந்து சேரும். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும்.

**அரசியல்வாதிகள்:** செல்வாக்கில் சிறிது சரிவு ஏற்படலாம். அதே வேளையில் பதவியும், பொறுப்பும் வந்து சேரும். பணம் வந்த வழி தெரியாமல் செலவழியும். வீண்




அலைச்சலும் வாக்கு வாதமும் அவ்வப்போது வாட்டி வதைக்கும்.

**மாணவர்கள்:** சிறப்பாக படிப்பர். விளையாட்டுகளில் சாகசம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள் புகழும் விருதும் பெறுவார்கள். மனம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் ஏற்படும். போட்டிகளில் பங்கு பெற ஆர்வம் உண்டாகும். மனகுழப்பம் நீங்கி தெளி வான முடிவுகளை எடுப்பீர்கள். ஆனால் மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கௌரவம், அந்தஸ்து அதிகரிக்கும்.

**அஸ்தம்:** இந்த மாதம் குடும்பத்தில் உற்சாகம் இருக்கும். மற்றவர்கள் உங்களை அனுசரித்து செல்வார்கள். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சியான நிலை காணப்படும். பிள்ளைகளால் மருத்துவச் செலவு ஏற்படலாம். பேச்சின் இனிமை சாதூரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும். எதிர்காலத்துக்கு உதவக் கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். ஆன்மிகச் சிந்தனை அதிகரிக்கும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஓடர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச் சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விடயங்கள் சாதகமாக முடி யும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண் டாகும். நீண்ட தூரப் பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர் கள் மூலம் உதவியும் கிடைக்க பெறுவீர்கள்.

**பரிகாரம்:** புதன்கிழமைதோறும் அருகிலிருக்கும் ஐயப்பன் அல்லது சாஸ்தா கோவிலுக்குச் சென்று நெய் தீபம் ஏற்றி வரவும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28

**அதிஷ்ட தினங்கள்:** 21, 22

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13, 14ஆம் திகதி...

மதுவரித் திணைக்களத்தின் பதிவைப் பெற்ற மதுபானசாலைகளை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 13ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை, சுற்றுலா அதிகார சபையின் அனுமதி பெற்ற விடுதிகளில் தங்கியிருக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம் மதுபானம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## மே 6 திட்டமிட்ட...

குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, தேர்தல் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதே நேரத்தில் நீதிமன்றத் தீர்ப்புகளை மதிப்பதில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுதிப்பாட்டையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது என்றும் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-4)

## யாழ்ப்பாணத்தில்...

கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## 11 இந்திய மீன...

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 14 இந்திய மீனவர்களில் 3 இந்திய மீனவர்களுக்கு எதிராக ஏற்கெனவே குற்றப்பத்திரங்கள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், எஞ்சிய 11 பேரும் நேற்றுப் பகல் அவசர அவசரமாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து, அவர்களுக்கு எதிரான "பி" அறிக்கையை விலக்கிக் கொள்வதாக அரச தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்தமையை அடுத்து குறித்த 11 பேரும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

அத்தோடு, 11 பேரும் தமிழகத்துக்கு திருப்பி அனுப்பப்படுவதற்காக உடனடியாக கொழும்பு மிரிஹானவில் உள்ள புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-4)

## நிராகரிக்கப்பட்ட...

கியது.

ஆனால் கடந்த நான்கு நாட்களாக இதேபோன்ற மனுக்களை விசாரித்து வந்த உயர்நீதிமன்றம் இதே காரணத்துக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஏற்று அங்கீகரித்து இருப்பதோடு, தேர்தல் வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மொத்தம் 53 ரிட் மனுக்கள் மற்றும் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் நேற்று அடியோடு நிராகரித்துத் தீர்ப்பளித்தது.

சமாதான நீதவான் சான்றுரைத்த பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தின் பிரதியை ஏற்றுக்கொள்ள உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பில் காலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட விடயத்துக்கு முற்றிலும் தலைகீழான முடிவை - தீர்ப்பை உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைராஜா, மகிந்த சமயவர்த்தன, சம்பத் அபயக்கோன் ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை நேற்றுப் பிற்பகல் வழங்கியது. (ம-4)

## 16 ஆயிரம்...

ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், இலங்கை முதலீட்டுச் சபையினர் மற்றும் வடக்கின் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக் கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவ்வளவு விரைவாக வடக்கின் மூன்று முதலீட்டு வலயங்களுக்குமான பணிகளை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செய்வதற்கே விரும்புகின்றோம்.

அடையாளப்படுத்தப்பட்ட மூன்று முதலீட்டு வலயங்களையும் நாங்கள் பார்வையிட்டுள்ளோம்.

காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய முதலீட்டு வலயத்துக்கான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாக தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன.

இதனை முன்னெடுப்பதிலுள்ள உடனடிச் சவால்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்குத் தீர்வுகளும் கண்டறியப்பட்டன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அதற்கான புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றைப் புனரமைத்து மீளமைப்பதுடன் அதனை காங்கேசன்துறை துறைமுகம் வரையில் விரிவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பரந்தனுக்கு அண்மையாக புகையிரத நிலையம், ஏ9 பிரதான வீதி உள்ளமை சாதகமான அம்சம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் சில இடங்களில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

மாங்குளத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி வனவளத் திணைக்களத்துக்குரியது என்பதால் அதனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது என்றார். (ம-4)

## இலங்...

தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, மீன்பிடி, நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரால், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இராஜதந்திரிகள் குழுவினருக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" (Friendship Of Centuries Commitment to Prosperous Future) என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் மோடிக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் மோடிக்கிடையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன. பேச்சுவார்த்தைகளின் நிறைவில் இருவராலும் கூட்டு ஊடக அறிவித்தலும் வெளியிடப்படவுள்ளது. (ம-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 5796
Y 8 6 5 0 5 2
அத சம்பத
Y 5 0 5 2
சீட்டிழுப்பு இலக்கம் 0371
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1826
Y 07 34 35 68 Y
Double Chance 87333

மெகா பவர்
திகதி 04/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2144
U 26 14 29 38 48

ஜய JAYA
திகதி 2025.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 064
V 1 4 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4038
சீட்டிழுப்பு திகதி 04.04.2025
Z 23 30 51 60
Z
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 1105
மீனம் 03 36 43 60 மீனம்
02985 37

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.04.2025 வெற்றி வாரம் 504
K 7 2 9 3 9 1
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.34,963,615.20
56839
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2770
சீட்டிழுப்பு திகதி 2025.04.04 தினம் வெள்ளிக்கிழமை
25 65 68 76 P
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.54,634,948.00
DLB

சனிதா
திகதி 04.04.2025 வெற்றி வாரம் 4931
17 39 62 74 A
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ. 59,524,504.80
71778
DLB

சசிரி
வெற்றி வாரம் 657
சீட்டிழுப்பு திகதி 04.04.2025
வெள்ளிக்கிழமை
02 05 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4482
சீட்டிழுப்பு திகதி 04.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
23 29 51 55
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.3,000,000.00
122836
DLB

ஆங்கில எழுத்து, சுபர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 22 41 52 66 75
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.570,878,264.40
1946
04.04.2025
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2596
சீட்டிழுப்பு திகதி 2025.04.04
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.54,821,084.80
02 26 37 42 I
375002
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEC

யாழ் நகர், பெருமாள் கோவில் அருகாமை

**A/L 2027** கலை & வர்த்தகம் புதிய பிரிவு

ஆரம்பம் :- 06.04.2025 ஞாயிறு காலை 09 மணி

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-2612) தொடர்புகளுக்கு : 076 535 0999

# K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

**A/L - 2027 வர்த்தகப்பிரிவு**

ஆரம்பம் : 06.04.2025 ஞாயிறு 2.30 p.m

பொருளியல் : S.Jeyakumar
கணக்கீடு : A.T. Suren
வணிகக்கல்வி : T.S. Richi

(3847)

தொடர்பு : 077 723 8597

## பணி வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. கணக்காளர்
2. காசாளர்
3. கணினி இயக்குனர்

பொருத்தமானவர்கள் தங்களது விண்ணப்பங்களை 076 0004 903 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும் (C-2619)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2620)

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 2" நீர் உறிஞ்சும் நீல கோஸ் (Suction Blue Hose) 32 Kg எடை கொண்டதும் கிணற்று கட்டில் மடியாததும் இப்பொழுது எம்மிடம். நீல நிறத்திற்கு மாற்றியுள்ளோம். சந்தையில் எடை, தரம் குறைந்தவை வந்து விட்டதால் விவசாயிகள் ஏமாறாமல் இருப்பதற்காக.

"நாங்கள் உங்களோடு"



**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
(3852)

Hotline: 071 535 7799 / 071 535 7803

வலம்புரி 076 636 3378 / 076 097 3127

## தென்னங்காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
14 பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 02 துண்டுகளும்
19 பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 02 துண்டுகளும்
அருகருகில் விற்பனைக்கு உண்டு.
கொடிகாம நகரத்தில் இருந்து 2.5 கி.மீ தூரத்தில் (3854)

தொடர்புகளுக்கு : 077 327 6500

## காணி விற்பனைக்கு உண்டு

**உரும்பிராய் வடக்கில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,200,000 (பன்னிரண்டு இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1 ½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

(3850)

076 990 3039 / 077 468 3354

## வீடு வாடகைக்கு

வவுனியா கல்வியியல் கல்லூரிக்கு முன்பாக வீடு வாடகைக்கு உண்டு. (1000)

077 039 7966

## காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் அவெனியுவில் 3.5 பரப்புக் காணி மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு. (3840)

தொடர்புகளுக்கு: 076 342 4705

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 36 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=), இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.

(3850)

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:
076 860 2770, 076 987 8617
076 935 3971

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்





- திருமணப்பட்டுச் சாறிகள்
- கொட்டன் சாறிகள், சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 05.04.2025 முதல் சித்திரைப் புத்தாண்டு வரை
(வாரத்தின் 7 நாட்களும்)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 222/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 263/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg கீரி சம்பா | - 260/= | Max 3Kg |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000/=~~ |
| 700g சுபோஷா | - 580/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 47/= | ~~80/=~~ |
| 180Ml சன்சில்க் சம்போ(மஞ்சள்) | - 380/= | ~~480/=~~ |
| 1.5 ℓ பெப்சி சோடா | - 320/= | ~~360/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர் 270/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (3859)

Happy Supermarket 0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.